முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, 2011ஆம் ஆண்டிற்கு முன்பு பணி நியமனம் பெற்று தற்போது ஆசிரியராக பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் கட்டாயம் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது குறித்தும், ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அச்ச உணர்வினை போக்கும் வகையில் தனது தலைமையில் பல்வேறு ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது குறித்தும், அக்கூட்டத்தில் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவித்த கருத்துகளை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை பெற்றார். அப்போது முதலமைச்சர், ஆசிரியர்களின் நலன் காத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், திராவிட மாடல் அரசு எந்த சூழ்நிலையிலும் ஆசிரியர்களைக் கைவிடாது என்றும் உறுதியளித்தார். இச்சந்திப்பின்போது, மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. உடனிருந்தார்.

53 மாதங்களில் – 1 கோடியே 93 இலட்சத்து 28 ஆயிரத்து 309 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பட்டதால் 3 மடங்கு நெல் உற்பத்தி செய்து சாதனை!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேட்டி!

சென்னை, நவ.23- வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (22.11.2025) சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, முதல் தளத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கூட்டரங்கில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் தவறாக நெல் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். டெல்டா பகுதிகளில் திடீரென்று வடகிழக்கு பருவ மழை ஆரம்பித்த மறுநாளே தீவிரமான மழை பெய்தது. குறுவை நெல்லை பொறுத்தவரையில், குறுகிய கால பயிராக விவசாயிகள் நடவு செய்வார்கள். அறுவடைக்கு முன்பாகவே, மழை வந்தால் உடனே அறுவடை செய்ய முடியாது. முதிர்ச்சி அடைந்த பிறகு தான் கதிரை அறுவடை செய்ய முடியும். பிஜேபியின் முன்னாள் தலைவர் காவல் துறையைச் சார்ந்தவர். விவசாயத்தைப் பற்றி தெரியாது. நேற்றைக்கு அவர் ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார். மழை வருவதற்கு முன்பே அறுவடை செய்திருக்கலாமே என்று அவர் கூறியிருக்கிறார். மழை பெய்வது என்பது இயற்கை. அது எப்போது வரும் என்பது யாருக்கும் தெரியாது. முன்பெல்லாம், வடகிழக்கு பருவமழை தொடங்கி 10 நாட்களுக்குப் பிறகு தான் தீவிரமான மழை தொடங்கும்.

தற்போது காலமாற்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், மழை திடீர், திடீரென்று பெய்கிறது. விவசாயிகள், மழை, வெயில், வறட்சி ஆகிய இவைகளை எல்லாம் சமாளித்து நடைபெறக்கூடியது தான் விவசாயம். அந்த வகையில், குறுவை விவசாயத்தைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டை விட இந்த அரசின் முன்னெடுப்பு காரணமாக குறுவை தொகுப்பை முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஆண்டுதோறும் குறுவை தொகுப்பை அறிவித்திருந்தார். இந்த ஆண்டு குறுவை தொகுப்பு கிட்டத்தட்ட 214 கோடி ரூபாய் அளவிற்கு டெல்டா பகுதிகளிலும், டெல்டா இல்லாத மற்ற பகுதிகளிலும் கூடுதலாக அறிவித்திருக்கிறார். மெஷின் மூலமாக நடுவதற்கு நான்காயிரம் ரூபாயும், இடு பொருள் இலவசமாகவும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கின்ற காரணத்தாலும், அதிகமான விவசாயிகள் இதனால் பயனடைந்து வருகின்றனர்.

அதேபோல, நெல்லின் விலை கிட்டத்தட்ட குவிண்டால் இரண்டாயிரத்து 500 ரூபாய் அளவிற்கு உயர்த்தி வழங்கப்பட்ட காரணத்தாலும், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட்ட காரணத்தாலும், மூன்று மடங்கு நெல்லை உற்பத்தி செய்திருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டு ஆட்சி காலங்களில், ஒரு கோடியே 19 இலட்சத்து 81 ஆயிரத்து 352 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், தற்போது 53 மாதங்களில் 1 கோடியே 93 இலட்சத்து 28 ஆயிரத்து 309 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

அதேபோல, கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில், 7 இலட்சத்து 27 ஆயிரத்து 650 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிக்கின்ற கிடங்குகள் கட்டப்பட்டிருந்தது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டு காலத்தில், 4 இலட்சத்து 3 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நெல் சேமிக்கின்ற கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் இருக்கின்றது. இந்த ஆண்டு கூடுதலாக 3 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் சேமிக்கின்ற கிடங்குகள் கட்டி முடிக்க ப்படும் நிலையில் இருக்கின்றது.

மொத்தம் இந்த ஆட்சியில் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் நெல் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டிருக்கிறது. பத்தாண்டு கால ஆட்சியில் சேமிப்பு கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டது 7 இலட்சம். ஆனால் இந்த நான்காண்டு காலத்தில் சேமிப்பு கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டது 7 இலட்சம் மற்றும் பிற. இவை தவிர, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாக 1 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிக்கக்கூடிய கிடங்குகளில் நெற்பயிர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகிறது.

குறுவை நெல்லை பொறுத்தவரையில், கடந்த காலங்களில் விவசாயிகள் நெல் உற்பத்தி செய்யும் காலங்களில் அறுவடை செய்யமாட்டார்கள். அவர்கள் காலத்தே அறுவடை செய்யவேண்டும். அறுவடை செய்வதற்கு களங்கள் இருக்கவேண்டும். நல்ல சாலைகள் இருக்கவேண்டும். இவை போன்ற நிலைகள் இல்லாத காரணத்தில் குறுவை நெல் அவ்வளவாக செய்யவில்லை. மேலும், 14 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, அறுவடை செய்து, அதை வயலில் இருந்து விவசாயிகள் சாலைக்கு கொண்டு வரவேண்டும்; இல்லையென்றால், நெல்லை களத்திற்கு கொண்டு வரவேண்டும் இதுதான் நடைமுறை. தற்போது விவசாயிகள் இயந்திரம் மூலமாக நடவு செய்து அறுவடை செய்கிறார்கள். முன்பு விவசாயிகள் கையால் அறுவடை செய்தார்கள். தற்போது இயந்திரத்தின் மூலமாக அறுவடை செய்கிறார்கள்.

விவசாயிகளுக்கு குறுவை தொகுப்பு கூடுதலாக வழங்கும்போது இதுபோன்ற நெல்லை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு ஒரு திட்டத்தின் மூலம் நெல்லை அறுவடை செய்யும்போது ஒரு மூட்டைக்கு ஒரு கிலோ என்ற அளவிற்கு அரிசியில் கலக்க வேண்டும். மக்கள் சாப்பிடுகின்ற உணவில் அனைவருக்கும் இரும்பு சத்து கிடைக்கக் கூடிய அளவிற்கு இருக்க வேண்டும் என்ற காரணத்தினால், ஒன்றிய அரசு ஒரு திட்டமாக இதனை கொண்டு வந்திருக்கிறது. ஆனால், இதற்கு சரியாக அனுமதி வழங்கவில்லை. அதனால், விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை அந்தந்த பகுதிகளுக்கு கிட்டத்தட்ட 70 மில்களுக்கு கொண்டு செல்லப்பட்ட நெல் தேக்கமாக இருக்கின்றது.

மேலும், ஈரப்பதமான நெல்லை ஒன்றிய அரசின் குழு வினாரால் ஆய்வு செய்யப்பட்டது. இதற்கு மானியம் வழங்க இயலாது என்று நிராகரித்து விட்டார்கள். இதனை எல்லாம் பார்த்துவிட்டு பாரதப் பிரதமர் அவர்கள் கோயம்புத்தூரில் இயற்கை விவசாய மாநாடு நடத்தி இருக்கிறார்கள். ஆனால், இயற்கை விவசாயம் செய்யாதவர்கள் அதனை நடத்தி இருந்தார்கள். அப்போது நடத்திய இயற்கை விவசாயி ராமசாமி அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார்கள். எதிர்ப்பு தெரிவித்து, இயற்கை விவசாயம் செய்யாதவர்கள் இயற்கை விவசாயம் என்ற போர்வையில் மாநாடு நடத்தியிருந்தார்கள். ஈரப்பதமான நெல்லிற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதனை மறுத்துவிட்டு, இங்கே விவசாய மாநாடு நடத்தியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி அவர்கள் ஏன் நெல்லை அறுவடை செய்யவில்லை என்று கேட்கிறார்? பயிர் முதிர்ச்சி அடைந்த பிறகு தான் விவசாயிகள் அறுவடை செய்யமுடியும். இதற்கு ஏன் மழை வருவதற்கு முன்பே நீங்கள் அறுவடை செய்திருக்கலாமே என்று அண்ணாமலை அவர்கள் கேள்வி கேட்கிறார். பச்சையான பூவும், காயுமாக இருக்கின்ற நெல்லை எப்படி அறுவடை செய்ய முடியும்? என்று இவைகள் எல்லாம் தெரியாமல் இந்த அரசின் மீது தூற்றவேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, நெல்லின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. குறுவை தொகுப்பு மூலமாக விவசாயிகளுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல கடந்த நான்கரை ஆண்டுகளில், பயிர் காப்பீட்டைப் பொறுத்தவரையில், 5 ஆயிரத்து 997 கோடி காப்பீட்டுத் தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது. இந்த காப்பீட்டுத் தொகையின் மூலமாக 37 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். அதேபோன்று மழை, வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகள் காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரத்து 692 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. இதனால், கிட்டத்தட்ட 20 இலட்சத்து 84 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்து இருக்கிறார்கள் என்று இதன் மூலம் இந்த செய்தியை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு தினந்தோறும் ஏதாவது செய்தி ஊடகத்தில் வரவேண்டும் என்பதற்காக இதனை செய்து கொண்டிருக்கிறார். ஆக்கபூர்வமான வேலைகள் இன்னும் செய்யவில்லை.

தற்போது நம்முடைய அரசாங்கம் காவிரி டெல்டா பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் அனைத்தும் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

துறைமுகம் - எழும்பூர் - கொளத்தூர் தொகுதிகளில் மருத்துவ முகாம்கள்!

கனிமொழி சோமு எம்.பி. – ஆர்.அண்ணாமலை – நா.எழிலன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர்!

சென்னை, நவ.23- சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நேற்று (22-11-2025) துறைமுகம் தொகுதியில் அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் குழுவும் எழும்பூர் கொளத்தூர் ஆகிய தொகுதிகளில் கற்பகம் மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் குழுவும் பங்கேற்ற மூன்று மருத்துவ முகாம்களில் முதல் மருத்துவ முகாமாக உதயம் 2.

உதயம் கண்டு குணமாவோம் உதவும் திராவிட இனமாவோம் எனும் தலைப்பில் காலை 8.30 மணியளவில் துறைமுகம் தொகுதி, ஏழுகிணறு பகுதியில் உள்ள சமூக நலக்கூடத்தில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் விஷ்ணு சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமில் கழக மருத்துவ அணி தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கனிமொழி என் வி என் சோமு அவர்களும், இரண்டாவது மருத்துவ முகாமாக உதயம் 3. ஆயுள் காக்கும் மருத்துவம் ஆதவன் உதயம் துணை வரும் எனும் தலைப்பில் எழும்பூர் தொகுதி, டவுட்டன் பகுதியில் உள்ள எஸ் ஆர் மஹாலில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் பா சங்கர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமில் கழக மருத்துவ அணி இணைச் செயலாளர் மருத்துவர் ஆர் அண்ணாமலை அவர்களும் மூன்றாவது மருத்துவ முகாமாக உதயம் 4.

எல்லா உயிரும் நம் உயிரே! என்றும் காக்கும் இளம் கதிரே! எனும் தலைப்பில் கொளத்தூர் தொகுதி திரு வி க நகர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள காமராஜர் திருமண மண்டபத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ் தனசேகர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமில் கழக மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா எழிலன் எம் எல் ஏ அவர்களும்,மருத்துவம் தேவை பட்டோர்களை பரிசோதித்து அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகள் கொடுத்தும், ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கியும் சிறப்பித்தனர்.

இம்மருத்துவ முகாம்களில் மேயர் பிரியா ராஜன், இரா.கிரிராஜன்.எம்.பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி, ப. ரங்கநாதன், எஸ் முரளி, எஸ்.ராஜசேகர், பி சுதாகர், சோ. வேலு, ஐசிஎப் முரளிதரன், எ. நாகராஜன், வானவில் விஜய், பா. ஜெகதீஷ், வினோத், எல் நவீன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், எம் தாவூத் பி, மற்றும் கழக செயல்வீரர்கள் நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரா.துரைராஜ் எம்.சி. தலைமை! அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கவுரை!

சைதை கிழக்கு பகுதி சார்பில் இளைஞர் எழுச்சி நாள் கருத்தரங்கம்!

டாக்டர் காந்தராஜ் - ராஜகம்பீரன் - பேரலை இந்திரகுமார் - சுபேர் ஜமால் கருத்துரை!

சென்னை, நவ. 23 - சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு தலைமுறைகள் வாழ்த்தும் தலைவன் என்கிற தலைப்பில் கருத்தரங்கம் 22.11.2025 மாலை சென்னை வேளச்சேரி குருநானக் கல்லூரி வளாகத்தில் உள்ள கலையரங்கம் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் தொடக்கவுரையாற்றினார்.

பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. எஸ்.குணசேகரன் மின்னல் கந்தப்பன் தா.மோகன்குமார் எம்.சி. வட்ட கழக செயலாளர்கள் நேருநகர் எஸ்.பாட்சா வே.முருகன் ஆகியோர் வரவேற்றனர்.

கருத்தரங்கு நிகழ்ச்சியில் டாக்டர் காந்தராஜ், ராஜகம்பீரன், பேரலை இந்திரகுமார், சுபேர் ஜமால் ஆகியோர் துணை முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி கருத்துரை வழங்கினர்,.

இந்நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், க.தனசேகரன் எம்.சி. பாலவாக்கம் சோமு, போரூர் எஸ்.அருணாசலம், வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி. கவிஞர் காசிமுத்துமாணிக்கம், வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி. மு.மனோகரன், எஸ்.பாஸ்க்கர் எம்.சி. வாசுகி பாண்டியன், எம்.எஸ்.ஹரிபாபு, ரத்னா லோகேஷ்வரன் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள் வே.ஆனந்தம் எம்.சி. எம். விநாயகமூர்த்தி, கே.கண்ணன் எம்.சி. மு.இராஜா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி. வி.எ.மதியழகன் எம்.சி. நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் அயப்பாக்கம் அ.ம.துரைவீர மணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி. சைதை மா.அன்பரசன் களக்காடி எல்லப்பன் எம். கே.ஏழுமலை உ.துரைராஜ் எஸ்.டி.தங்கராஜ் பி.எஸ்.முருகேசன் அ.அரிகிருஷ்ணன் அடையார் அ.பாலசுந்தரம் பி.ஜே.பாஸ்கர் ராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி. த. பஷீர் வீர கனிமொழி

பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி, டி.என்.சிவமணி, சைதை த.சம்பத், சைதை ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், இளைஞர் அணி கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ண குமார், ச.சங்கர்க ணேஷ் எம்.சி., ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், செ. ரவி, சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், பா.அருண்குமார், கழக த.ரமேஷ் சி.பரிமேலழகர் ம.பார்த்திபன் சி.சுரேஷ் எம்.ஆர்.சசிகுமார் கே.குமரேசன் ஆ.விஜயபாலா வி. ராஜேஷ் கனிமொழி தனசேகரன் நிஷா சையத் த.ஜெகதீசன் நா.முகேஷ்கண்ணா மருத்துவர் அனிஷ் எஸ்.பி.அருள் வி. ஜெயசந்திரன் சைதை கிழக்கு மேற்கு வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன் எல்.ஆரோக்கியராஜ் க.மணி கோட்டூர் கோ.சண்முகம் ஆ. வரதன் சை.மு.சேகர் அட்கோ கமலநாதன் ந.தமிழரசு எஸ். பி.கோதண்டம் எம்.நாகா மாவட்ட பிரதிநிதிகள் டி.வி. நரசிம்மன் க.உமாபதி ஜி.யோவான் வே.ரமேஷ் குமார் என். நந்தகோபால் எஸ்.ராதாகிருஷ்ணன் எஸ்.ஜெ.சலாம் எஸ்.ரவி ச.சேகர் இரா.சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ் லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன், ஏ.மஜித், கு.புகழ்வேந்தன், ஜி. கே.ராமசந்திரன், வி.மதிவாணன், பொன்.ஜெய்சிங், பால்கார் ரவி, ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, கழக பேச்சாளர்கள் க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கம் முடிவில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் தி.கோகுலன் நன்றி கூறினார்.

பல்லாவரம் தெரசா மேல்நிலைப் பள்ளியில் பசுமை விழிப்புணர்வு மிதிவண்டி பயணம் கன்னியாகுமரியில் தொடங்கி பள்ளிக்கு வருகை தந்துபசுமை வளர்ச்சி குறித்து விழுப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியை நடத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ கலந்து கொண்டு மிதிவண்டியில் வருகை தந்தவர்களை வரவேற்று ஊக்குவித்து பாராட்டி சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு சைதை மேற்கில் மாபெரும் கருத்தரங்கம்!

மருதுஅழகுராஜ், அருள் பிரகாசம் வாழ்த்துரை! தமிழச்சி தங்கபாண்டியன், மு.மகேஷ்குமார், ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா பங்கேற்பு!

சென்னை, நவ.23- சென்னை தெற்கு மாவட்டம். சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு 24.11.2025 (திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை, மேட்டுபாளையம் கோடம்பாக்கம் சாலையில் உள்ள வி. கே. எம். மஹாலில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் முன்னிலையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இனம், மொழிப்போரில் மாவீரன்! என்ற தலைப்பில், கழக செய்தி தொடர்பு துணைத்தலைவர் மருது அழகுராஜ், பட்டமன்ற பேச்சாளர் அருள்பிரகாசம், வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

இந்நிகழ்விற்கு சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலக்குழு தலைவர் இரா. துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடிஎல்லப்பன், மின்னல் கந்த ப்பன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை அமைப்பாளர் எம். எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், அட்கோ கமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆகியோர் வரவேற்புரையாற்ற உள்ளனர்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., போரூர் எஸ்.அருணாச்சலம், கவிஞர் காசிமுத்துமாணிக்கம், வழக்கறிஞர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர் எம்.சி., வாசுகிபாண்டியன், ரத்னாலோகேஸ்வரன் எம்.சி., பகுதி கழக, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன்,

அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, வே.ஆனந்தம் எம்.சி., எம்.விநாயகமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், ஆர்.கிருஷ்ண குமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், எம்.கேஏழுமலை, எஸ்.அரிகிருஷ்ணன், உ. துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், ப.அருண்குமார், சி.பரிமேலழகர், கழக த.ரமேஷ், கொட்டிவாக்கம் ம.பார்த்திபன், சி.சுரேஷ், எம்.ஆர்.சசிகுமார், ரா.பாலசுந்தரம், அடையார் பி. ஜே.பாஸ்கர், இராமாபுரம் வ.செல்வகுமார், த.பஷீர், வீர.கனிமொழி, குமரேசன், இராமாபுரம் வி.ராஜேஷ், கனிமொழி தனசேகரன், நிஷாசையத், தரமணி ஜெகதீசன், டாக்டர் அனிஷ், மு கே ஷ் க ண் ண ன், வி.ஜெயச்சந்திரன், எஸ். பி.அருள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ், ஜெ.இ. பாண்டியன், கா.வீ. தியாகராஜன், செ. ரவி, சைதை கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி, தா.மோகன்குமார் எம்.சி., நா.ராதாகிருஷ்ணன் எம்.சி., எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, ஆ.வரதன், வே.முருகன்,

மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், பால்கார் ரவி, பொன்.ஜெய்சிங், ஜி. கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, த.மணி, ஆர்.எல்.காந்தன், டி.வி.நரசிம்மன், எஸ். சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், இரா.சுதாபிரியன், ந.பாபு, மு.மகேஷ், கே.எம்.எஸ். கணேசன், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஏ. மஜித், எஸ்.ரவி, தலைமைகழக பேச்சாளர்கள், ஒப்பிலாமணி, ஏ.எஸ்.பழனி, ஈகை கோ.தனசேகரன், ஆட்டோபாஸ்கர், மு. அஜிம், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க. பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், மு.அருண், எஸ். பரத்குமார், கொடி கே.பாலா, மே.குணா, தி. கோகுலன், பா.அருண்குமார், கோ. ராஜன், ப.பரத்குமார், ராஜா சம்பத், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என். சம்மந்தம், ஆட்டோ தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள் காளி, தீ.ராஜ்குமார், கே. தாஸ், என். தீனதயாளன், அ.தமீம்அன்சாரி, வெ.பு ருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ. கிஷோர்குமார், பி. ஆர்.துரைராஜ், ஆர்எஸ்டி. சிற்றரசு, பி.நரேஷ்குமார், எஸ்.ரவீந்திரகுமார், ஆர். ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், கவி.தமிழ்வேல், கே. ஸ்டெல்லாமேரி, வி. செல்வி, ஜி.ராஜேஸ்வரி, பி. செண்பகம், கே.சுந்தரி, பி. செல்வராணி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ். ரமேஷ், ஜி.ஜெ.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் எஸ்.மணி, ஆட்டோஜான், சார்ப்சரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி குமார், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், ஆர்.தனசேகரன், எஸ்.கோகுல்குமார், வழக்கறிஞர் மாரியப்பன், விவேக் செல்வம், மருத்துவர்கள் ஆர்.துரைராஜ், ஜீவபிரபாகரன், உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாகக ளப்பணியாளர்கள், கழக முன்னோடி கள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வின் இறுதியாக 140வது வட்ட கழக செயல